முன்னாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் சேவை (1990-2004) நினைவாக....

# சாரல்

இதழ்: 07

தைத்திங்கள் 2015

வள்ளுவர் ஆண்டு 2046

**OBA** ஆண்டு செய்தி மடல்

30.06.2015

பழையமாணவர் சங்கம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## வளரும் பணி வளம்பெற வேண்டும்....



தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் மாணவனாக கல்வி கற்று பின் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து தொடர்ந்து பகுதித்தலைவராக, பிரதிஅதிபராக, அதிபராக என்று பதவி வழியாக மாணவர்களது கல்வி விடயத்திற்கும் கல்லூரியின் அபிவிருத்திக்கும் தன்னை முன்னுதாரணமாக செயற்படுத்திக்கொண்டவர், எமது மதிப்புக்குரிய முன்னாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள். இந்த பெருமையும் மதிப்பும் அவருக்கே உரிய தனித்துவமான ஒன்றாகும். எனினும் எமது கல்லூரியின் அதிபர் என்பதற்கு அப்பால் பழையமாணவன் எனக் கூறுவதில் இக்கல்லூரி மகிழ்வடைகின்றது.

சுவாமி விபுலானந்தரின் வரிசையில் கல்லூரி பல அதிபர்களை பெற்றுக்கொண்டது. எனினும் காலத்தின் தேவைக்கேற்ப கல்லூரியையும் எமது சமூகத்தையும் உயர்துவது பற்றிய சிந்தனையில் நேர்த்தியும் மனதில் துணிவும் ஆளுமையும் என்பனவற்றுடன் இளமையும் கொண்ட அதிபராக 1990இல் இவர் பதவியேற்ற காலமானது பல சவால்களை எதிர்கொண்ட ஒரு காலமாகும். இனத்துவ முரண்பாடுகள், நாட்டின் அமைதியற்ற சூழல்கள் இவரது எண்ணங்களை தடையிட்டபோதும், நேர்மையும் நெஞ்சுறுதியும் நியாயமான கருத்தியல்களும், பக்கச்சார்பின்மையும் ஆகிய பண்புகளால் பலரது எதிர்ப்புகளையும் இலகுவாக வெற்றிகொண்ட அதிபராகத்திகழ்ந்தார். எடுத்த காரியத்தில் தடைகள் வரும் போது தளராது செயற்பட்ட பல அனுபவங்களை நான் மாணவனாக கற்ற காலத்தில் அவர் ஆசிரியராக பணியாற்றிய போது அவரிடம் காணமுடிந்தது. இவரது நிர்வாக முறைமையில் பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் நிழல்களாக மட்டுமன்றி பக்கவேர்களாகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அவர்களுக்கு வழிகாட்டி சிறந்த தலைமைத்துவத்திற்கு அணிகலனாக திகழ்ந்தார். இவரது காலத்தில்தான் மைதானத்திற்கான காணியை எல்லையிட்டு உரிமையை பாதுகாக்கும் நோக்கில் செயற்பட்ட போது அதிபர் என்ற ரீதியில் பல சவால்களை எதிர்கொண்டார். இச்சூழலில் பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள் ஓர் அணியாக நின்று செயற்பட்டு அதிபருக்கு வழங்கிய ஒத்துழைப்பும் நம்பிக்கையும் இவரது தலைமைத்துவத்திற்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

கல்லூரியின் செயற்பாடுகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு கல்லூரி சமூகத்திற்காக திறந்துவிடப்படல் வேண்டும் என்ற சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தார். பாடசாலை நிகழ்வுகளில் பலதரப்பட்ட சமூகத்தினரும் உள்வாங்கப்பட்டனர். அத்துடன் பழைய மாணவர்களது தொடர்புகளை மீள் உருவாக்கம் செய்யும் வகையில் பழையமாணவர் சங்கத்தை புனரமைப்பு செய்து அதன் மூலமாக பாடசாலைச்சமூகத்திற்கும் பழைய மாணவர்களுக்குமிடையே உறவுகளை பலப்படுத்தியதுடன் கடல் கடந்த நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் பழைய மாணவர்களது தொடர்புகளை ஏற்படுத்தி லண்டன், கனடா போன்ற நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை புனரமைத்து கல்லூரியின் செயற்பாடுகளுக்கும் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்குமான பங்களிப்பை ஏற்படுத்தினார். இதன் மூலம் வறுமையான பாதிக்கப்பட்ட மாணவர்களது கல்விக்காக கனடா பழைய மாணவர் சங்கத்தினூடாக ஞானிநிதியத்தை உருவாக்கி மாணவர்களது கல்வி அபிவிருத்திக்கு வழிஅமைத்தார்.

மாணவர்களது கற்பித்தல், கல்விசார் பிரச்சனைகள் அல்லது பொது விடயங்கள் தொடர்பில் நல்ல அனுபவம் மிக்கவராக செயற்படும் தன்மை இன்றும் நாம் அவதானிக்க கூடிய ஒரு விடயமாகும். அவரிடம் பிரச்சனைகளை முன்வைக்கும் போது அதனை கவனமாக ஆறுதலாக கருத்தூன்றி செவிமடுத்து உரிய பதில்களை தீர்வுகளை விளக்கமாக கூறி பௌவியமாக பழகும் தன்மை இவரிடம் காணப்பட்ட மற்றொரு உயர்நிலைப் பண்பாகும்.

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும், இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

### நோக்கு

கல்லூரயின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்பணிப்பு.

### Vision

"An Exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.இ.அசோக்
உதவி பதிப்பாசிரியர் : திரு.சண்.பாரதிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அபிவிருத்திக்காக புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். லண்டன் பழைய மாணவர்களது அழைப்பினூடாக அங்கு சென்றபொழுது அவர்களால் வழங்கப்பட்ட நிதியினைக்கொண்டு பல்ஊடாக அறை ஒன்றை அமைத்து எமது மாகாணத்தில் முதன் முதலில் அரச உதவியை எதிர்பாராது பல்ஊடக அறையை அமைத்த பெருமையை பெற்றுக்கொண்டார். இதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீன உலக மாற்றத்திற்கமைய எதிர் கொள்ள வேண்டிய தொழில்நுட்ப அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்வதுற்கும், வழங்குவதற்கும் வழிவகுத்தார். எமது கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் கல்வி அபிவிருத்தி, இணைபாடவிதான செயற்பாடுகள் மாணவர், ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக கூடிய கவனம் செலுத்தினார்.

இதனால் செயல் திறன் மிக்க அதிபராக பணியாற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். இவரது இந்தப் புகழுக்கு காரணமாக விளங்கிய மேன்மையான அந்த சிந்தனைகளாவன...

- கல்லூரிக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்த கல்லூரி சமூகம் திறந்து விடப்பட வேண்டும்.
- கல்லூரி முறைமைகள் கல்லூரியை ஆள வேண்டும்.
- மேலும் அனுபவங்களை ஏற்படுத்த கல்வி செயற்பாட்டுடன் கூடிய இணைப்பாடவிதானம் விரிவாக வழங்கப்படல் வேண்டும்.
- அதிகாரங்கள், பொறுப்புக்கள் பகிரப்படல் வேண்டும்.
- கல்லூரியின் விழுமியங்கள், பாரம் பரியங்கள் சமய நடவடிக்கைகள், மதிப்பீட்டு மாணவர்களது ஒழுக்கவிருத்தி என்பன வளர்க்கப்படல் வேண்டும்.
- மனிதவளம், பௌதீகவளங்கள் என்பவற்றை கல்லூரிக்காக தேடுவதுடன் அவை உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும்.
- எந்த செயற்பாடுகளும் நேர்த்தியாகவும், உண்மைக்கும் வெளிபடு தன்மைக்கும் உட்பட வேண்டும்.
- உரித்தாளர்களது உறவு நிலை உயர்வாக இருக்க வேண்டும்.
- கல்லூரி சமூகத்திற்கு சேவைகளையும், நல்ல விடயங்களையும் வழங்க வேண்டும்.
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய மாற்றங்களை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்வாங்க வேண்டும்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்கள், பயன்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இவையே அவரது மேன்மைதங்கிய சிந்தனைகளாக இருந்தன.


அதிபர் பணியை நிறைவு செய்துகொண்டு தொடர்ந்து கல்வி நிர்வாக சேவையாளரர் என்ற வகையில் வடக்கு கிழக்கு மாணவர்களதும் கல்வி அபிவிருத்திக்காக வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் கடமையை ஏற்றுக்கொண்டார். கடமை புரிந்த காலத்தில் கல்வி அபிவிருத்திகாக பல செயற்திட்டங்களையும் கல்வி அபிவிருத்தி மாநாடுகளையும் நடாத்தி கல்வி புலத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார். இவரது கல்வி நிர்வாக திறமை காராணமாக வடக்கு கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளார் என்ற பதவி உயர்வு பெற்று கல்விசார் சேவைகளை வழங்கினார். இவரது கல்வித்துறைசார் முன் மாதிரி செயற்பாடுகள் மூலமாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் பதவி உயர்வுடன் கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடிய கவனம் எடுத்து செயற்பட்டு வெற்றிகண்டார்.

மனித விழுமியங்களுடன் கூடிய கல்வித்தறையின் வளர்ச்சிப் போக்கில் மணிமகுடம் சூடி நின்ற அவரை அடையாளம் கண்டுகொண்ட எமது பழைய மாணவர் சங்கம் அவரை பாராட்டி கௌரவித்ததுடன் "கல்விக்கலம்பகம்" எனும் நூலியத்தினையும் வெளியிட்டு மணிமகுடத்தில் மேலும் ஒரு முத்தினைப் பதித்திருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இளமைக்காலத்திலே இவரிடம் தமிழ் உணர்வு மேலோங்கி இருந்ததால் திருக்கோணமலை இளைஞர் அணி, பல்கலைகழக தமிழ் மன்றம் என்பவற்றில் காத்திரமான பங்களிப்பை வழங்கியதுடன் தமிழ் சமய மொழி கலைதுறை விடயங்களுக்கும் மதிப்பளித்து செயற்பட்டார். காலப்போக்கில் எமது பிரதேசத்தின் அரசியல் தலைமைத்துவத்துக்கு தேவை உள்ள நிலையில் அதற்கான தயார்படுத்தலில் இவரது பெயரையும் மக்கள் முன்வைத்தனர். இதனால் கிழக்கு மாகாணசபை தேர்தலில் வெற்றி பெற்று கிழக்கு மாகாண சபையின் எதிர்கட்சி தலைவராக பணியாற்றினார். நாட்டில் ஏற்பட்ட நல்லாட்சி காரணமாக கல்விப்புலத்தில் இவரது ஆற்றல், அனுபவம் காரணமாக கிழக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டு இம்மாகாண மக்களுக்கு தமது சேவையை வழங்கி வருவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். அவரது பணி மேலும் தொடர எமது வாழ்த்துக்கள்.

செ.பத்மசீலன்
அதிபர்-தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014ம் ஆண்டு உலக ஆசிரியர் தின நிகழ்வு




# 2014ம் ஆண்டு பழையமாணவர் தின விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கல்வியும் விளையாட்டுத்துறையும்...



பூரண ஆரோக்கிய வாழ்வு என்பது நோய்கள் அற்று இருப்பது மாத்திரமல்ல உடல், உள, சமூக, ஆன்மிக நலன்களில் பரிபூரண நிலையை பெற்றிருப்பது என்பதாகும்.

இன்றைய கல்வித் துறையை உற்று நோக்கும் போது வாழ்வியலுக்கான கல்வி என்ற நிலை மாறி வாழ்க்கைக்கான கல்வியாகவே காணப்படுகின்றது. இக் கல்வித்துறையினூடாக மட்டும் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைந்து விட முடியாது. அல்லது இது ஒரு ஆரோக்கியமான கல்வி முறையா என வினவும் பட்சத்தில் எதிர்மறையான விடையே கிடைக்கப் பெறுகின்றது.

இற்றைக்கு இரண்டு, மூன்று தசாப்தங்களுக்கு முன் கல்வித்துறையில், மாணவர்களுக்கிடையிலான நல்ல சமூக தொடர்பாடல் (சமூக நலன்) காணப்பட்டது. அதாவது பாடசாலைக் கல்வியை பிரதானமானதாகவும் தனியார் வகுப்புக்கள் (Tution Center) மேலதிகமாகவும் கொண்ட காலத்தில் ஆசான் மாணவர்களுக்கிடையில் மிகச்சிறந்த அன்னியோன்யமான குரு சிஷியன் என்ற உறவு பணிவு பேணப்பட்டது ஆனால் இன்றோ தனியார் வகுப்புக்கள் (Individual Class), Internet access, Computer games, Social Network, என்பவற்றால் மாணவர்கள் மிக அதிகளவில் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள் இதனால் மாணவர்களிடத்தில் காணப்பட வேண்டிய அடிப்படை பண்புகள் அற்றுப்போய் சமூக சீர்கேடுகளுக்கு காரணமாக இருப்பதுடன் சிறு வயது பராயத்தில் இருந்தே தொற்றா நோயின் தாக்கமும் அதிகரித்துச் செல்கிறது. மிகபரிதாபமான நிலை என்னவென்றால் நேரம் விரயமாகின்றது என்ற காரணத்தால் துவிச்சக்கர வண்டியைக் கூட பயன்படுத்த வழியற்ற ஒரு சமூகமாக அதுமாறி வருகிறது.

“சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம்” என்பது முதுமொழி எம்மவர்கள் ஆரோக்கியத்தின் அடிப்படையான உடல் நலத்தை பற்றி சிந்திக்காமல் ஏனைய உள, சமூக, ஆன்மீக நலம் அடைய முற்படுகின்றார்கள் உடல் நலத்தை எவ்வாறு பெறுவது என்று வினவினால் தொடர்ச்சியான உடற்பயிற்சி, போஷாக்கான உணவு, ஓய்வு, நிம்தியான உறக்கம் என்பவற்றை பெறுவதால் மட்டுமே முடியும்.

எம்மவர்கள் வெளித்தோற்றத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள், போட்டி, பொறாமையின் விளைவாக கடிகாரத்தை விட வேகமாக ஓட முற்படுகிறார்கள் 5ம் தரம் புலமைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக அச் சிறார்களை 2ம் தரத்தில் இருந்தே தயார் படுத்தும் சமூகம் எமது உடலினுள் 9 தொகுதிகள் இருப்பதை உணர்கின்றார்களா? அவற்றின் செயற்பாடுகளின் தன்மையை இயல்பாக்குவதற்கு ஏதாவது முயற்சிக்கின்றார்களா? இத் தொகுதிகள் ஒவ்வொன்றாக செயலிழக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே, அதனை கூர்மையாக ஆராய்ந்து ஏராளமான பணத்தையும் விரயமாக்கின்றார்கள் ஏன் இந்தநிலை?

இதனை எமது சமூகம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது மரண பயத்தால் கட்டாயம் உடற்பயிற்சி செய்ய வேண்டிய நிலையில் காலையிலும் இரவு நேரங்களிலும் வீதிகளில் நடைபவனி செய்யும் 40-50 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரையும் அவதானிக்க முடிகின்றது.

மறுபுறம் கல்வித்துறையை முற்றாக புறக்கணித்து விட்டு வியைாட்டுத்துறையில் முற்றாக ஈடுபடும் ஒரு சமூகம், இன்று விளையாட்டு துறையை இரண்டு கோணங்களில் பார்கின்றது. அவையாவன

01. மனிதனின் அடிப்படை உடற் தகுதியை பெறுதல் (Sports of Fitneess)
02. தொழில் ரீதியான விளையாட்டு (Professional Sports)

இவை இரண்டில் கல்வித்துறையை முற்றாக புறக்கணித்த சமூகத்தால் தொழில் ரீதியான விளையாட்டில் பங்குகொள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாக காணப்படுகின்றது. காரணம் வளர்ந்து வரும் விளையாட்டுதுறையின் விஞ்ஞான தொழில்நுட்ப, தந்திரோபாயத்தை அவர்களால் புரிந்துகொள்வது என்பது எட்டாகனியாகவே இருக்கிறது. எனவே இவ்வாறாக உருவாக்கப்படும் விளையாட்டுத்துறையினூடாக விளை யாட்டின் பண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்படுமே தவிர ஆரோக்கியமான அபிவிருத்திப் போக்கை அடைவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே கானப்படும்.

எமது திருமலை மண்ணின் விளையாட்டுத்துறையை இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்நோக்கி பார்போமாயின் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்த சில விளையாட்டுக்களில் தொடர்ச்சியாக தேசிய ரீதியான பதக்கங்களை பெற்றிருந்தனர். இலங்கை அணியின் பிரதிநிதிகளாக வெளிநாடுகளுடன் போட்டியிட்டு எமது பிரதேசத்தின் புகழை உலகெங்கிலும் பரப்பினர். ஆனால் இன்று மூன்று மாவட்டங்களை மட்டும் கொண்ட ஒரு சிறு மாகாணத்தில் உள்ள மற்றைய இரண்டு மாவட்டங்களுடன் கூட போட்டியிட்டு வெல்ல முடியாத துர்பாக்கிய நிலையில் உள்ளனர். இதனை அண்மைக்கால புள்ளி விபரங்கள் தெட்டத்தெளிவாக காட்டுகின்றது.

அதே நேரத்தில் ஏனைய மாவட்டங்களை எடுத்து நோக்குவோமாயின் புள்ளி விபர ரீதியில் விளையாட்டுத்துறை தொடர்பான அறிவும், ஈடுபாடும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது எனவே இவ்விளையாட்டுத்துறை தொடர்பான கல்வியானது சரியான முறையில் எம்மவர் மத்தியில் பரவலாக்கப்படுதல் வேண்டும் இது தொடர்பான விழிப்புணர்வு மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

கல்வித்துறையை மட்டும் முற்றாக ஏற்கும் சமூகமும். விளையாட்டுத் துறையை மட்டும் முற்றாக ஏற்கும் சமுதாயமும். முற்றுபெற முடியாது என்பது வெளிப்படையான உண்மையாகும். இரண்டும் ஒன்றாக இணையும் பட்சத்தில் மட்டுமே சிறந்த ஆரேக்கியமான சமூகப்பாங்கான சமூகத்தை கட்டி எழுப்ப முடியும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

க.உமாசுதன்
பயிற்றுனர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களின் 2014ம் ஆண்டுக்குரிய உயர் அடைவுமட்டம் பற்றிய ஓர் ஆய்வு

## G.C.E O/L Result Analysis - 2014

| S.No | Subject | Sat | A | % | B | % | C | % | S | % | W | % | Pass | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mathematics | 157 | 37 | 23.6 | 18 | 11.5 | 34 | 21.66 | 37 | 23.6 | 31 | 19.75 | 126 | 80.25 |
| 2 | Science | 157 | 37 | 23.6 | 21 | 13.4 | 46 | 29.3 | 43 | 27.4 | 10 | 6.36 | 147 | 93.63 |
| 3 | English | 157 | 21 | 13.4 | 7 | 4.46 | 57 | 36.31 | 54 | 34.4 | 18 | 11.46 | 139 | 88.54 |
| 4 | History | 157 | 58 | 36.9 | 27 | 17.2 | 40 | 25.48 | 26 | 16.6 | 6 | 3.822 | 151 | 96.18 |
| 5 | Tamil | 157 | 38 | 24.2 | 36 | 22.9 | 39 | 24.84 | 30 | 19.1 | 14 | 8.917 | 143 | 91.08 |
| 6 | Hinduism | 126 | 51 | 40.5 | 22 | 17.5 | 24 | 19.05 | 20 | 15.9 | 9 | 7.143 | 117 | 92.86 |
| 7 | RC | 14 | 11 | 78.6 | 2 | 14.3 | 0 | 0 | 1 | 7.14 | - | 0 | 14 | 100 |
| 8 | NRC | 6 | 4 | 66.7 | 1 | 16.67 | 1 | 16.67 | - | 0 | - | 0 | 6 | 100 |
| 9 | Islam | 11 | 5 | 45.5 | 3 | 27.3 | 2 | 18.18 | 1 | 9.09 | - | 0 | 11 | 100 |
| 10 | Geography | 38 | 4 | 10.5 | 10 | 26.3 | 18 | 47.37 | 5 | 13.2 | 1 | 2.632 | 37 | 97.37 |
| 11 | Business & Accounting | 119 | 51 | 42.9 | 24 | 20.2 | 28 | 23.53 | 10 | 8.4 | 6 | 5.042 | 113 | 94.96 |
| 12 | Music | 36 | 21 | 58.3 | 4 | 11.1 | 9 | 25 | 1 | 2.78 | 1 | 2.778 | 35 | 97.22 |
| 13 | Art | 19 | 3 | 15.8 | 4 | 21.1 | 8 | 42.11 | 3 | 15.8 | 1 | 5.263 | 18 | 94.74 |
| 14 | Drama & Thaetre | 27 | 2 | 7.41 | 7 | 25.9 | 13 | 48.15 | 5 | 18.5 | - | 0 | 27 | 100 |
| 15 | Tamil Literary | 57 | 10 | 17.5 | 3 | 5.26 | 16 | 28.07 | 14 | 24.6 | 14 | 24.56 | 43 | 75.44 |
| 16 | English Literary | 8 | 2 | 25 | 1 | 12.5 | 4 | 50 | 1 | 12.5 | - | 0 | 8 | 100 |
| 17 | ICT | 53 | 20 | 37.7 | 10 | 18.9 | 14 | 26.42 | 7 | 13.2 | 2 | 3.774 | 51 | 96.23 |
| 18 | Agriculture & Food Tech | 20 | 3 | 15 | 3 | 15 | 10 | 50 | 3 | 15 | 1 | 5 | 19 | 95.00 |
| 19 | Health & Physical Edu | 84 | 41 | 48.8 | 20 | 23.8 | 16 | 19.05 | 4 | 4.76 | 3 | 3.571 | 81 | 96.43 |

### G.C.E O/L 2014 - 9A

- Narayanamoorthy Aburajan
- Arunthavarajah Krishothman
- Sothyrajah Prarthanan
- Konamalai Sadacharan
- Vigneswaran Vithushan
- Narendranath Vithushanath
- Sundaralingam Baranavan
- Pathmarajah Jathurshan
- Mohamed Sally Mohamed Shamry
- Jaffer Ali Rishad Ali

### G.C.E O/L 2014 - 8A

- Jeyanathan Theyshanth
- Yogaratnam Kirithargan
- Rohan Marian Bosco Jerome
- Moorthy Linthujan
- Sivaloganathan Venuganan
- Kumar Senthuran
- Ravichandran Sarugesh
- Vasudevan Koshikan
- Premendran Kajathees
- Meenadchisundaram Saranyan
- Thiruchelvam Akshayan
- Sivanesan Charujan

## சாதாரணதரப் பரீட்சையில் 9A பெறுபேற்றை பெற்ற மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் 2014ம் ஆண்டுக்குரிய உயர் அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

## Streamwise Analysis

| Subjects | No Sat | A | % | B | % | C | % | S | % | W | % | No Passed | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Physics | 116 | 10 | 8.62 | 14 | 12.07 | 35 | 30.17 | 34 | 29.31 | 23 | 19.83 | 93 | 80.17 |
| Chemistry | 116 | 21 | 18.10 | 10 | 8.62 | 37 | 31.90 | 30 | 25.86 | 18 | 15.52 | 98 | 84.48 |
| Com.Maths | 62 | 7 | 11.29 | 6 | 9.68 | 5 | 8.06 | 10 | 16.13 | 24 | 38.71 | 38 | 61.29 |
| Biology | 54 | 2 | 3.70 | 10 | 18.52 | 19 | 35.19 | 13 | 24.07 | 10 | 18.52 | 44 | 81.48 |
| Agriculture | | | | | | | | | | | | | |
| Economics | 86 | 11 | 12.79 | 17 | 19.77 | 18 | 20.93 | 22 | 25.58 | 18 | 20.93 | 68 | 79.07 |
| Bus.Studies | 77 | 4 | 5.19 | 19 | 24.68 | 19 | 24.68 | 22 | 28.57 | 13 | 16.88 | 64 | 83.12 |
| Accounting | 77 | 15 | 19.48 | 8 | 10.39 | 15 | 19.48 | 21 | 27.27 | 18 | 23.38 | 59 | 76.62 |
| Hindu Civilization | 5 | 2 | 40.00 | 2 | 40.00 | | | | | 1 | 20.00 | 4 | 80.00 |
| Geography | 14 | | | 1 | 7.14 | 6 | 42.86 | 5 | 35.71 | 2 | 14.29 | 12 | 85.71 |
| Tamil | 14 | | | 2 | 14.29 | 1 | 7.14 | 6 | 42.86 | 5 | 35.71 | 9 | 64.29 |

## Comparison Analysis – 2014

| Subjects | No.Sat | Passed | | Last Year% |
|---|---|---|---|---|
| | | No | % | |
| Physics | 116 | 93 | 80.17 | 73.72 |
| Chemistry | 116 | 98 | 84.48 | 77.37 |
| Com.Maths | 62 | 38 | 61.29 | 57.33 |
| Biology | 54 | 44 | 81.48 | 78.81 |
| Agriculture | - | - | - | - |
| Economics | 86 | 68 | 79.07 | 57.28 |
| Bus.Studies | 77 | 64 | 83.17 | 65.98 |
| Accounting | 77 | 59 | 76.62 | 60.82 |
| Hindu Civilization | 5 | 4 | 80 | 66.67 |
| Geography | 14 | 12 | 85.71 | 75.00 |
| Tamil | 14 | 9 | 64.28 | 75.00 |

## Streamwise Analysis – 2014 – 1st & 2nd Attempt – 2014

| | | | | No Of Subjects | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Stream | Attempt | No Applied | No Sat | 3 | % | 2 | % | 1 | % | 0 | % | Qualified Apply For University | % |
| Bio-Science | 1 | 30 | 30 | 19 | 63.33 | 4 | 13.33 | 2 | 6.67 | 5 | 16.67 | 19 | 63.33 |
| | 2 | 25 | 24 | 22 | 91.67 | 2 | 8.33 | - | - | - | - | 22 | 91.67 |
| | Total | 55 | 54 | 41 | 75.93 | 6 | 11.11 | 2 | 3.70 | 5 | 9.26 | 41 | 75.93 |
| | | | | | | | | | | | | | |
| Phy – Science | 1 | 51 | 51 | 27 | 52.94 | 9 | 17.65 | 5 | 9.80 | 10 | 19.61 | 27 | 52.94 |
| | 2 | 14 | 11 | 9 | 81.82 | 2 | 14.29 | - | - | - | - | 9 | 81.82 |
| | Total | 65 | 62 | 36 | 58.06 | 11 | 17.74 | 5 | 8.06 | 10 | 16.13 | 36 | 58.06 |
| | | | | | | | | | | | | | |
| Commerce | 1 | 63 | 61 | 45 | 73.77 | 2 | 3.28 | 8 | 13.11 | 6 | 9.84 | 45 | 73.77 |
| | 2 | 18 | 16 | 11 | 68.75 | 4 | 25.00 | - | - | 1 | 6.25 | 11 | 68.75 |
| | Total | 81 | 77 | 56 | 72.72 | 6 | 7.79 | 8 | 10.38 | 7 | 9.09 | 56 | 72.72 |
| | | | | | | | | | | | | | |
| Arts | 1 | 13 | 13 | 7 | 53.85 | 1 | 7.69 | 3 | 23.08 | 2 | 15.38 | 7 | 53.85 |
| | 2 | 1 | 1 | - | - | 1 | 100.00 | - | - | - | - | - | - |
| | Total | 14 | 14 | 7 | 50.00 | 2 | 14.29 | 3 | 21.43 | 2 | 14.29 | 7 | 50.00 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (உ/த) பரீட்சை 2014
# மாவட்டமட்டத்தில் முதல் பத்து இடங்களை பெற்று திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தினால் பாராட்டுப்பெற்ற மாணவர்கள்

| Name | Stream | Result | District Rank |
|---|---|---|---|
| T.Abiheshan | Bio S | 3A | 2 |
| K.Srijeyanharish | Bio S | 3A | 3 |
| N.Thanuhanth | Bio S | A, 2B | 5 |
| R.Sarugan | Bio S | 2A, B | 8 |
| A.Dilakshan | Com | 3A | 2 |
| S.Yathavan | Com | 2A, B | 6 |
| R.Shara Shanthuru | Com | 2A, B | 7 |
| K.Tharsanan | Phy S | 3A | 1 |
| S.Braveen | Phy S | 3A | 2 |
| J.Sarangan | Phy S | 3A | 3 |
| S.Abisuthan | Phy S | 3A | 4 |
| J.Karish | Phy S | 2A, B | 9 |

# பொன்அணிகளின் சமர்

எமது கல்லூரிக்கு சமூக மட்டத்தில் கீர்த்தியை ஏற்படுத்தி தரும் ஒரு அம்சமாக இருப்பது மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்துடன் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி.

1993ம் வருடம் செப்தெம்பர் மாதம் 15ம் நாள் முதலாவது போட்டி எமது கல்லூரி மைதானத்தில் மென்பந்து போட்டியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது பின்னர் அடுத்த வருடம் கடின பந்து போட்டியாக மாற்றம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராம கிருஷ்ணமிசன் பாடசாலைகளுக்கு இடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதற்காக இப்போட்டி ஏற்படுத்தி வைக்கப்பட்டது.

இவ்வருடம் 22வது போட்டியாக இது சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் வைகாசி மாதம் 16ம் நாள் நடத்தப்பட்டது. இதில் எமது கல்லூரி அணியினர் 56 ஓட்டங்களால் வெற்றி பெறத் தவறி விட்டனர்.

போட்டி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாக போட்டிகளை நடத்தி வரும் அணியினர் வெற்றி பெற்று மண்ணின் மைந்தர்கள் என்ற பொருமையை தக்க வைத்திருந்தனர். இந்த நிலையை எமது கல்லூரி அணியினர் 2000ம் வருடம் மட்டக்களப்பு மண்ணில் முதலாவது வெற்றியை பதிவு செய்து நிலைமையை மாற்றி அமைத்தனர். பின்னர் அடுத்த அடுத்த வருடங்களில் இந்நிலைமை மாற்றம் பெற்று விருந்தினர் அணி வெற்றிபெறும் நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இம்முறை நடைபெற்ற போட்டியில் மீண்டும் இந்நிலை மாற்றம் பெற்று சொந்த மைதானத்தில் வெற்றியை பெற்றுக் கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மிகுந்த பணச் செலவுகள் கூடியதாக இவ்விளையாட்டு அமைந்தாலும் போட்டியை நடத்துவதற்கு இரண்டு பாடசாலைகளும் பல்வேறு பிரயத்தனங்கைளை மேற்கொண்டு நடத்தி வருகின்றன. இலங்கையின் முன்னணி தொலைபேசி வலையமைப்பு வழங்குநர்களான டயலொக் நிறுவனம் இப்பொட்டிக்கான அனுசரணையை வழங்குவது இரண்டு பாடசாலைகளது செலவினங்களை கணிசமான அளவு குறைத்துள்ளது.

நிதி நிறுவனங்கள் இப்போட்டியை நடத்துவதற்கு இணை அனுசரணைகள் வழங்கி போட்டிகள் தடையின்றி தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

தொடர்ந்தும் நாம் நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என எதிர்பார்த்திருத்தலாகாது. பழைய மாணவர்களது ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியமானதாகும்.

எதிர்காலத்தில் இப்போட்டிக்கான முழு அனுசரணையையும் பழைய மாணவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதன் மூலம் இதனை சிறப்பாக நடத்த முடியும்.

போட்டி வெற்றி தோல்விகளுக்கு அப்பால் நட்புறவை வளர்பனவாகவும். உறவுகளை தொடர்வனவாகவும் அமைய வேண்டும். எந்த ஒரு அணியினரும் தாம் தோற்க வேண்டும் என்பதற்காக பயிற்சிகளில் ஈடுபடுவதில்லை. தங்களது முழுமையான அர்ப்பணிப்புகளை வழங்கி பயிற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியமாதாகும் முக்கியமானதாகும். தனித்து கல்லூரியாலும் வீரர்களாலும் மட்டும் இதனை கொண்டு நடத்த முடியாது. ஏனையவர்களும் இதற்கு ஒத்துழைப்பும் உற்சாகமும் வழங்க வேண்டும். வெளியில் இருந்து வெறும் ஆலோசகைனகளை வழங்குவதால் எதனையும் சிறப்பாக செய்ய முடியாது. பங்குதாரராக மாறி ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் சிறப்புக்களை ஏற்படுத்தி கொள்ள முடியும்.

இவ்வருடம் நடைபெற்ற 22வது போட்டியில் இரண்டு அணியினரும் வர்ண சீருடையில் ஆட்டத்தை மேற்கொண்டனர். இப்போட்டியில் இரு அணியினரும் இறுதிவரை துடுப்பெடுத்து விளையாடியமை சிறப்பம்சமாகும். முதலில் துடுப்பெடுத்தாடிய சிவானந்தா வித்தியாலய அணியினர் 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பதிலுக்கு களம் புகுந்த எமது கல்லூரி அணியினர் 49.3 பந்து பரிமாற்றங்களில் 174 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். ஆட்டம் முழுமையாக விறுவிறுப்புத் தன்மை கொண்டதாக இப்போட்டி அமைந்திருந்தது.

சி.சசிகுமார்
விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANUJAN HARDWARE

**DEALERS IN ALL KIND OF BUILDING METERIALS, HARDWARE ITEMS, ELECTRICAL GOODS ETC....**

Prop: S.Anpalagan



**Office: No.777, NC Road, 3rd Mile Post, Uppuveli, Trincomalee.**
**Branch: No.1034/1, Selvanayagapuram, Trincomalee.**
**Tel: 026 2050452, Mob: 0776396737, 0713499874**

# AAA

**BUILDING CONSTRUCTION & METERIALS SUPPLIER**



**Office: No.777, NC Road, 3rd Mile Post, Uppuveli, Trincomalee.**
**Branch: 6th Mile Post, Nilaveli Road, Periyakulam.**
**Tel: 026 2050452, Mob: 0776396737, 0713499874**

SS digitals 0715415854

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org